**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) -2017**

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) செயற்திட்டத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பகுதி – 1 இற்கான 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க, பகுதி - 2 இற்கான 2015 மே 28 ஆம் திகதிய 3221 மற்றும் 3222 ஆம் கடன் இலக்க மற்றும் பகுதி – 3 இற்கான 2015 டிசெம்பர் 11 ஆம் திகதிய 3225 மற்றும் 3226 ஆம் இலக்க கடன் இலக்க உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவர்கள் ஆகும். கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பதும் நெடுங்கால விளைவுகளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 06 பல்வேறு பகுதி நிதியிடல் வசதியின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அவற்றில் 04 வெவ்வேறு கடன் உடன்படிக்கைகளுக்கு 2017 டிசெம்பர் 31 வரை கைச்சாத்திடப்பட்டிருந்தன. இதன் மூலம் முதல் 04 பகுதிகளுக்கும் ரூபா 72,410 மில்லியனுக்குச் சமமான 557 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கப்படும். ஏனைய கடன் உடன்படிக்கைகள் ஏனைய 02 பகுதிகளின் கீழ் ரூபா 31,590 மில்லியனுக்குச் சமமான 243 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியளிப்பதற்கு 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கைச்சாத்திடப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட 04 பகுதிகளில், 02 ஆம் பகுதிக் கடன் இலக்கம் 3222- SR1(SF) மற்றும் 03 ஆம் பகுதிக்கான இலக்கம் 3326 – SR1 (SF) என்பன முறையே 2017 ஏப்ரல் 07 ஆந் திகதியன்றும் 2017 மார்ச் 27 ஆந் திகதியன்றும் முடிவடந்திருந்தன. 2014 யூன் 01 ஆந் திகதி ஆரம்பமாகிய நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 2024 மார்ச் 30 ஆந் திகதி நிறைவடையவுள்ளன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா

என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்றும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளலாம் என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிகழ்ச்சித்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழான நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு செலவிடப்பட்ட ரூபா 129.2 மில்லியன் இச்செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவக் கிரயமாகக் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமை

நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வை மதியுரையாளர்களது ரூபா 60.60 மில்லியனுக்கான உழைக்கும் போதே செலுத்தும் வரியை 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக நிகழ்ச்சித்திட்டமே கொடுப்பனவு செய்திருந்தது
.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின்போதும் 2017 டிசெம்பர் 31 வரையானதுமான நிதிப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் கீழே காட்டப்படுகின்றன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கென பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதி: மீளாய்வாண்டின்போது | | பயன்படுத்திய நிதி: 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 800 | 104,000 | 18,437.70 | 121.79 | 18,437.62 | 291.42 | 42,499.60 |
| இலங்கை அரசாங்கம் | 106 | 13,780 | 400.00 | - | 185.20 | - | 442.40 |
| **மொத்தம்** | **906** | **117,780** | **18,837.70** | **121.79** | **18,622.82** | **291.42** | **42,942.00** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்படி தகவல்களின் பிரகாரம், கடனளிக்கும் முகவர் நிலையத்தால் வழங்கப்பட்ட ரூபா 104,000 மில்லியனுக்கு நிகரான 800 மில்லியன் அமெரிக்க டொலராகிய மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில், நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமாகி 3 ½ ஆண்டுகள்

முடிவடைந்ததன் பின்னர் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,499.6 மில்லியனுக்கு நிகரான 291.42 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் வேலைத்திட்ட அடிப்படையிலமைந்த மீளாய்வாண்டிற்கான விரிவான பாதீடு செயற்திட்டத்தால் தயாரிக்கப்படவில்லை. ஆகவே, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் உள்ள ரூபா 400 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகையில் ரூபா 185 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீகச் செயலாற்றல்

நிகழ்ச்சித்திட்டத்தினது ஆரம்பத் திட்டத்திற்கமைய, கிராமிய வீதிகளில் 2,200 கிலோ மீட்டரும் தேசிய வீதிகளில் 400 கிலோ மீட்டரும் புனரமைக்கப்படும் வேலை நிகழ்ச்சித்திட்டத்தால் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 3,108 கிலோமீட்டர் கிராமிய வீதிகளையும் 248 கிலோ மீட்டர் தேசிய வீதிகளையும் புனரமைப்பதற்கென 03 தடவைகள் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், தெற்கு, சபரகமுவ, மத்திய, வடமத்திய, வடமேல் மாகாண மற்றும் மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்திலும் 740 கிராமிய வீதிகளில் 3,131 கிலோ மீட்டரைப் புனரமைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய வீதிகளது வடிவமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், 09 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் தென் மாகாணத்தில் உள்ள 165 கிராமிய வீதிகளில் 582 கிலோ மீட்டரைப் புனரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கைப் பிரகாரம், சகல ஒப்பந்த நடவடிக்கைகளும் 2017 மே 17 ஆந் திகதி முடிவடையவிருந்தன. எவ்வாறாயினும், 03 முதல் 05 மாத கால தாமதத்துடன் 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழான ஹம்பாந்தோட்டை மாவட்ட வீதிப் புனரமைப்பு வேலைகள் மாத்திரமே மீளாய்வாண்டு முடிவில் நிறைவேறியிருந்தன. மேலும், ஏனைய 07 ஒப்பந்தப் பொதிகளின் கீழான தென் மாகாணத்தில் உள்ள 500.03 கிலோ மீட்டர் கிராமிய வீதிகளது புனரமைப்பு வேலைகள் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கை அடையாதிருந்தன. வேலையை நிறைவேற்றக் கால நீடிப்பு வழங்கியபோதும் ஒப்பந்தகாரர்களது செயல் முன்னேற்றம் நலிவாக இருந்தமையே இதற்கான காரணமாகும்.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தால் புனரமைக்கப்படவிருந்த மத்திய மாகாணத்தின் 126 மாகாண மற்றும் கிராமிய வீதிகளது 594.55 கிலோ மீட்டர் மற்றும் சபரகமுவ மாகாணத்தின் 101 மாகாண மற்றும் கிராமிய வீதிகளது 472.75 கிலோமீட்டர் என்பவற்றில், மத்திய மாகாண கிராமிய வீதிகளின் 238.72 கிலோ மீட்டர் மற்றும் சபரகமுவ மாகாணத்தின் கிராமிய வீதிகளது 453.64 கிலோமீட்டர் என்பனவே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அரைவாசி நிறைவேறியிருந்தன. ஒப்பந்தகாரர்களது நலிவான செயல்முன்னேற்றமே இதற்கான காரணமாகும். மேலும், மாத்தளை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட 54.39 கிலோ மீட்டர் தூரமுடைய 32 கிராமிய வீதிகள் மற்றும் கேகாலை, இரததினபுரி மாவட்டங்களில் புனரமைக்கப்பட்ட 238.22 கிலோ மீட்டர் கிராமிய வீதிகள் என்பன கையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் எதுவுமே கிடைக்கப் பெறவில்லை.

(இ) வடமேல் மாகாணத்தில் 08 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 114 கிராமிய வீதிகளின் 691.64 கிலோ மீட்டருக்கான புனரமைப்பு வேலைகளது செயல்முன்னேற்ற இலக்கு அடையப் பெறாத நிலையில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமிய வீதிகளின் 229 கிலோமீட்டர் தூரத்திற்கான வேலைகளே நிறைவேறி இருந்தன. மேலும், வடமத்திய மாகாணத்தில் 07 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 115 கிராமிய வீதிகளது 503.34 கிலோமீட்டருக்கான புனரமைப்பு வேலைகளும் இலக்கை அடையாதிருக்கையில் 2017 டிசெம்பர் 31 இல்

உள்ளவாறு கிராமிய வீதிகளின் 222 கிலோ மீட்டர் தூர வேலைகளே நிறைவேறியிருந்தன. 03 ஒப்பந்தப் பொதிகளின் கீழான வீதிப் புனரமைப்பு வேலைகளது பௌதீகச் செயலாற்றல் மிகமந்த கதியிலான செயல் முன்னேற்றத்தையே காட்டியபோதும், புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்துவதில் நிகழ்ச்சித்திட்டம் சீராக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. மேலும், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் உள்ள 83 கிராமிய வீதிகளது 277 கிலோமீட்டர் புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தம் 03 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வழங்கப்பட்டு ஒப்பந்தகாரரின் தோல்வி காரணமாக கிராமிய வீதிகளின் 48 கிலோமீட்டர் தூர வேலைகள் மாத்திரமே 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேறியிருந்தன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மாகாண மற்றும் கிராமிய வீதிகளது புனரமைப்பு வேலைகளுக்கான புனரமைப்பு வேலைகளது ஒப்பந்தம் 42 ஒப்பந்தப் பொதிகளின் வாயிலாக ரூபா 71,979 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர்களது நிதி மற்றும் வளங்களுக்கான ஆற்றலைக் கருத்திற்கொள்ளாது அவர்களைத் தெரிவு செய்தல், புனரமைப்பு வேலைகளுக்கான வடிவமைப்பு தவறாக அமைதல்,கிரய மதிப்பீட்டில் உள்ள வழுக்கள், முறையான மேற்பார்வையின்மை போன்ற ஒப்பந்த நிர்வாக நலிவுகள் என்பன வீதிப் புனரமைப்பு வேலைகளது செயல் முன்னேற்றத்தில் நேரடியாகவே தாமதத்தை நேரடியாகவே ஏற்படுத்தியிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொறியியலாளரது மதிப்பீட்டில் நிலவிய வழுக்கள் காரணமாக மாத்தறை மாவட்டக் கிராமிய வீதிகளது புனரமைப்பு வேலைத்திட்டத்தில் உள்ள 13 விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அதன் நிமித்தம் வேலைகளது மதிப்பிடப்பட்ட அளவு குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தன. மேலும், தென் மாகாணத்தில் உள்ள மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை கிராமிய வீதிப் புனரமைப்பிற்கான கிராமிய மதிப்பீட்டின்போது சாத்தியமற்ற கட்டணங்கள் பிரயோகிக்கப்பட்டதன் காரணமாக ஏனைய 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழான கிரய மதிப்பீடு ரூபா 352 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமுலாக்கும் முகவர் நிலையத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட பொறியியலாளர்களுக்கு அனுசரணையாக தென் மாகாண வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்தகாரர்கள் உபகரணங்களையும் ஏனைய சேவைகளையும் பெறுவதற்கும் அவற்றின் மீதான கிரயத்தை பிரமாணக் குறிப்பில் உள்ளடக்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, ஒட்டுமொத்தத் தொகையாக ரூபா 466 மில்லியன் ஒப்பந்தகாரர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட வசிதிகளின் தன்மை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கட்டண விபரம் என்பனவற்றிற்கான சான்றுகள் கணக்காய்வில் கிடைக்கப்பெறவில்லை.

(இ) காசுப் பற்றாக்குறை காரணமாக 03 மாகாணங்களில் 07 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர் ஒருவர் குறித்த தினத்தில் வேலையை நிறைவேற்றத் தவறியிருந்தார். காசுப்பாய்ச்சல் முகாமைத்துவ இடர்களை எதிர்கொள்ளும் விதத்தில் ESCROW எனப்படும் வசதியளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதன்மூலம் புனரமைப்பு வேலையை நிறைவேற்றுவதற்கு ரூபா 700 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரது நிதிசார் திட்டத்தை கண்காணிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் முறையான வழிவகைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. மேலும், இதற்கான கடனளிக்கும் முகவர் நிலையத்தினது இணக்கம் பெறப்பட்டதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) வேலையை ஆரம்பிப்பதற்கான தற்காலிகத் தொகையாகத் தீர்மானிக்கப்பட்ட தொகை 270,000 அமெரிக்க டொலர்கள் ஆகும். தேசிய வீதிகளது வீதி முகாமைத்துவ ஒப்பந்தத்திற்கு மேற்பார்வை மதியுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கான மதியுரை ஒப்பந்தம் மீதான எதிர்பாராச் செலவினம் ரூபா 626,030 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

(உ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி 2006 இன் 5.4.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கான ஆவணத்தின் 5.4.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவை நிகழ்ச்சித்திட்டத்தால் மாற்றங்களுக்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, நிகழ்ச்சித் திட்டத்தால் வழங்கப்பட்ட சகல ஒப்பந்தப் பொதிகளுக்கும், கோருமிடத்து உத்தரவாதத்தைக் கணக்கொழிப்பதற்கு நிபந்தனையற்ற உத்தரவாதம் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிகழ்ச்சித்திட்டத்தில் தோல்வியுறும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து வேலையை ஆரம்பிப்பதற்கென வழங்கப்பட்ட முற்பணத்தை அறவிடுவது சந்தேகத்துக்குரியதாக கணக்காய்வில் உணரப்பட்டது.

(ஊ) ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கையின் பொது நிபந்தனையாகிய 3.1(B)(ii) க்கு முரணாக, 02 ஆம் 03 ஆம் இலக்க ஒப்பந்த பொதிகளின் கீழ் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கிராமிய வீதிப் புனரமைப்புகளில் நிலவிய வேலைகளது வேறுபாட்டுத் தொகையாகிய ரூபா 38.50 மில்லியன் 01 ஆம் இலக்க ஒப்பந்த பொதியினூடாகக் கோரப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கைகளின் பொது நிபந்தனையினது 4.2 ஆம் உப பிரிவின் பிரகாரம், ஒப்பந்தப் பொதிகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் செயலாற்றல் பிணை முறியின் மீது ஏற்படும் கிரயமாகிய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் வங்கிக் கட்டணம் போன்றவற்றைத் ஒப்பந்தகாரர்களே செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், மேற் குறித்த வேண்டுகோளுக்கு முரணாக, நிகழ்ச்சித்திட்டம் வழங்கிய 42 ஒப்பந்தப் பொதிகளுக்கான பிரமாணக் குறிப்புக்களுகெனச் செயலாற்றல் பினை முறிகளுக்கு ஏற்பட்ட கிரயத்தை ஒப்பந்தகாரர்கள் பெறுமாறு 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 608.50 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளிலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் மூலம் உள்ளவாறு ஏற்பட்டிருந்த செலவினம் ரூபா 268.70 மில்லியன் மாத்திரமே. கூறு விலைகளை மதிப்பாய்வு செய்யும்போது நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட் கொள்வனவு நிபுணராலும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவாலும் கவனம் மேற்கொள்ளப்பட்டிராததும் மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3.5 சர்ச்சைக்குரிய விடயங்கள்

கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் வேலைகளில் ஈடுபட்ட உள்ளூர் ஒப்பந்தகாரர் ஒருவர் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் 2016 செப்டெம்பர் 05 ஆந் திகதிய TIP/TP/08/53/2016-69 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சலுகைகளை முறையற்றவாறு கோரி இயந்திர சாதனங்களையும் ஏனைய உபகரணங்களையும் இறக்குமதி செய்திருந்தார். இதற்கு வரிச் சலுகையும் வீதிப் புனரமைப்புகளின் பின்னர் இந்த இயந்திர சாதனங்களை மீள ஏற்றுமதி செய்வதற்கும் உடன்பாடாகியிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தப் பொதியில் குறிப்பிடப்பட்ட குறித்த வேலைகளுக்கு அவ்வாறான இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டமைமையக் கண்காணிக்கும் முறையான விதிமுறைகள் நிகழ்ச்சித்திட்டத்தால் கடைப்பிடிக்கப்படவில்லை.

## 3.6 நிதிசார் கட்டுப்பாட்டு விடயங்கள்

நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செலவழிக்கப்படாத கடன் தொகையின் மீது ரூபா 46.2 மில்லியனிற்கு நிகரான 305,203 அமெரிக்க டொலரிலான கடப்பாட்டுக் கட்டணம் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவர் நிலையத்தால் அறவிடப்பட்டிருந்தது.